உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு வைகாசிமீ கஎ-உ வெள்ளிக்கிழமை (31-5-1974) [இல: க

பரமேசுவரக் கல்விக் கழகத்தில்

# யாழ்ப்பாணப் பல்கலைவளாகம்

வள்ளல் போன். இராமநாதனின் மாண்பான மனத்தில் எழுந்த எண்ணம் கனவேயாகிவிடுமோ என்ற கவலையை நீக்கி நனவாகப் பரமேஸ்வரக் கல்லூரி நிலையத்தில் யாழ்ப்பாண வளாகம் (பல்கலை) நிறுவப்படுவதற்குப் பூர்வாங்க நடைமுறைகள் யாவும் செய்யப்பெறுகின்றன. வட மாகில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களின் விடாமுயற்சியினாலும், யாழ். அரசாங்க அதிபரின் உதவியினாலும் ஆரம்ப வேலைகள் துரிதமாக நிகழ்கின்றன.

## சித்தாந்த பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் இத் திங்கள் 24, 25, 26-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சித்தாந்த பிரவேச, பால பண்டித, பண்டித பரீட்சைப் பெறு பேறுகள் வருமாறு:—

சித்தாந்த பால பண்டிதர்

சு. இ. 14 திரு. வ. சண்முகராசா 2ம் பிரிவு
சு. இ. 16 செல்வி போ. ஜெகதீஸ்வரி 2ம் பிரிவு
சு. இ. 17 செல்வி போ. சந்திரகாந்தியம்மா 3ம் பிரிவு
சு. இ. 15 செல்வி போ. சகுந்தலாதேவி 3ம் பிரிவு

சித்தாந்த பிரவேச பண்டிதர்

சு. இ. 08 திரு. சிவ. ஆறுமுகசுவாமி நூனசித்தி (இலக்கணம்)
சு. இ. 15 திரு. போ. விநாயகமூர்த்தி 3ம் பிரிவு.

## பத்தாண்டு நிறைவுறும் வ.மா.சை.இ. மாமன்றம்

[ ஷ மன்றச் செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில ஓர் பகுதி. ]

வட மாநில சைவ இளைஞர் மா மன்றம் 13-4 64-ல் ஆரம்பிக்கப் பெற்றது சென்ற 10 வருட காலமாகச் சமயப் பணிகள் பல புரிந்துள்ளது.

கொடிக்கவி, விபூதியின் பெருமை ஆகிய நூல்களை மன்றம் வெளியிட்டுள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவப் படத்தை அச்சிட்டு வழங்கியது. சமயகுரவர், ஆறுமுகநாவலர், திருவள்ளுவர் போன்ற பெரியார்களின் குருபூசைத் தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடியது.

மரவரி முறையை நீக்கவும் எந்தச் சமய மாணவர் கூடுதலாகப் படிக்கின்றார்களோ அதே சமய ஆசிரியரைப் பாடசாலைகளில் நியமிக்க முயற்சி செய்துள்ளது.

யாழ்ப்பாணம்-பொது நூல் நிலையத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த யாழ். நங்கைசிலை அகற்றப்பட்டு சரஸ்வதிசிலையை நாட்டுவதற்கு உள்ளூராட்சிஅமைச்சர்வரை முறையிட்டு அதில் வெற்றியீட்டியது நமது மன்றம்.

இதேபோன்று காலந்தோறும் முக்கியமான பணிகளைப் புரிந்து வருவது இம்மன்றம். இன்று பத்துவருடம் நிறை

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## திருமுறைகளைச் சிறப்பாக ஓதல் வேண்டும்.

"திருமுறைகளைப் பண்ணுக்கு ஏற்ப, கட்டளை முறைப்படி பாடுதல் வேண்டும். பழைய மரபு தவறிப் பாடும் வழக்கத்தை நீக்க நாம் முயற்சிக்க வேண்டும். இந்த நல்லமுயற்சிக்கு உதவி செய்ய வடமாநிலக் கல்வித் திணைக்களம் முன்வந்தமை பாராட்டக்கூடியது"

வட இலங்கைச் சங்கித சபைச் சார்பில், கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் கூட்டப்பட்ட பண் இசைக் கட்டளை முறைகள் பற்றிய கருத்தரங்கில் தலைமைவகித்த வைத்திய கலாநிதி திரு. க. சிவஞானரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அனுப்பிவைத்த செய்தியில், "கட்டளை பண் இராகம் இவற்றின் தொடர்பு அறிய வேண்டியது. பாட்டுக்கள் ஒலினடிவங்கள், வாக்கு விருத்தியாகிய எழுத்தொலியால் ஆனவை. அவ்வொலி பண்பட்டுத் தன் செவிவரை ஒலிப்பது பண்" என்று குறிப்பிட்டிருந்தனர்.

புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, சங்கீத பூஷணங்களான பே. சந்திரசேகரம், கா. விஜேசிதத்தம்பி உட்படப் பலர் உரையாற்றினர்.

### கந்தப்புராண பெருவிழா

இலங்கை மெய்கண்டாராதீனத்தின் சார்பில், சைவ சமயச் சபைகளின் கூட்டுறவுப் பிரசாரச் சபை கந்தபுராணப் பெருவிழாவொன்றினை 26—5—74 தொடக்கம் 5—6—74வரை ஸ்ரீமத். ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் தலைமையில் கோப்பாய்க் கோலச் சித்திர வேலாயுதசுவாமி கோவில் மண்டபத்தில் நடத்துகின்றது.

சைவபூஷணம் திரு. நமசிவப்பிரகாசம் அவர்கள் ஆரம்பச் சொற்பொழிவை நிகழ்த்தினர். சைவக் காவலர் திரு. த. சிவலிங்கம்

உ

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை

நாள்: வைகாசிமீ 23-ம் திகதி [6-6-74] வியாழக்கிழமை
இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
நிகழ்ச்சிகள்:
முற்பகல் 12—00 மணி: சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை
நாவலர் மண்டபத்தில் - நடராஜர் பூசை,
நால்வர் பூசை, அன்னம்பாலிப்பு,

விரிவுரைக் கூட்டம்:
தலைவர்: திரு. நம, சிவப்பிரகாசம் அவர்கள் (சபைத் தலைவர்)
மாலை 6-30 மணி: கடவுளாராதனை, தமிழ்மறையோதல்
7-00 மணி: மாணவர் சிற்றுரைகள்
(அ) ''சைவமுந் தமிழும் வளர்த்த சம்பந்தர்'' — செல்வி குணரஜனி குணபாலசிங்கம் (இராமநாதன் கல்லூரி)
(ஆ) ''ஞானசம்பந்தரின் நயமிக்க வார்த்தை'' — செல்வன் வி. ருத்திரகுமாரன் (யாழ். மத்திய கல்லூரி)
சொற்பொழிவுகள்:
(1) ''ஞானசம்பந்தர் திருமணம்'' —சைவப்புலவர் வ. கந்தசாமி
(2) ''திருநெறிய தமிழ் வல்லவர்'' —திரு. ஷண்முக. குமரேசன்
நன்றி கூறல்.
அபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

வை. இரகுநாத முதலியார், காரியதரிசி.
மு. மயில்வாகனம், சமயப் பிரசார அமைச்சர்.
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், 31-5-74.

## வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா

வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா 4-6-74 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் க. கார்த்திகேசு முதலியவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். யாழ்ப்பாணம் சைவ மங்கையர் கழக ஆதரவில் திருமுறையோதலும் இடம்பெறும்.

J.P., திரு வே. மயில்வாகனம், திரு. நா. செல்லப்பா பண்டிதர், சைவப் புலவர் மூ. திருஞானசம்பந்தபிள்ளை பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

### திருமுறை விழா

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் 8, 9.6-74 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருமுறை விழா சபை மண்டபத்தில் நடைபெறும்.

சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவிற்கு திருமதி பாலம் இலட்சுமணன் தலைமை தாங்குவார், திரு. ச. சோமசுந்தரம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

திருமதி கங்கேசுவரி கந்தையா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்,

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் காலை 9 - 30 மணிக்கு

வளர்ச்சி 4-ம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ப நிலை யெய்தற்கு வழி

திரு. சோ. க. வேலாயுதர்
கொழும்பு

முற்றொடர் – 3.

"சும்மா யிருத்தல் சோம்பி யிருத்தலன்று. திருவடித் தியானம் வேண்டும்.

இத்தகைய வாழ்வு வாழ்ந்துவர மெய்யுணர்வு ஏற்படும். இதனல் மோன நிலை சித்திக்கும், மோன நிலை என்பது ஞானவரம் பன்றே. ஞானியர் தம் மூளே இறைவனைக் கண்டு அனுபவித்து இறுமாந்து ஞானனந்தத்திருப்பர். இந்த நிலை எல்லாருக்கும் இலேசில் கிட்டுவதொன்றல்ல. பல பிறவிதோறும் பயின்றிருந்த புண்ணிய வசத்தால் கிட்டுவது இது. இதுவே வீட்டு நெறி, முத்தி. மோட்சம், சாயுச்சியம் என பலவகையாக பகரப்படுவதாகும்.

நாம் கற்றவற்றை, கேட்டவற்றை சிந்தித்து அதனலே பெற்று அதற்குத் தக நிற்றல் வேண்டும். நிற்கையின்றேல் எதனுலும் ஒருவித பிரயோசனமுமிலலை. இனிக் இறது எப்படி என்ருல் அனுபவித்துத் தானே அறிய வேண்டும். அது போலவே வாழ்வின் இனிமையையும் காம செயற்பட்டு அனுபவித்து அறிய வேண்டும் அதுவே பூரண வாழ்வுமாகும்.

பொங்கார வேலையில்
வேலைவிட்டோனருள்
போலுதவ
எங்கா யினும்வரு
மேற்பவாக் கிட்டதிடாமல்
வைத்த
வங்காரமு முங்கள் சிங்கார
வீடுமடந்தையருஞ்
சங்காதயோர் கெடு வீருயி
போமத் தனிவழிக்கே.

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழக,

# சைவ அனுதை இல்லம

சைவ அனுதை நிலயத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் 6-6-74 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கைதடியில் நடைபெறும். கைதடி கண்டி வீதிக்கு அருகாமையில் அரசினர் அன்பளிப்புச் செய்த இரண்டு ஏக்கர் காணியில் இவ்விழா நடைபெறும்,

வடமாநில கல்வி அதிபர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை ஊர்வலமும் நடைபெறும். சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க, உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்துவார்கள்.

காலை 9 00 மணி முதல் 12-00 மணிவரை இவ் விழா நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

முருகேசு வேலும்மயிலும் நாவற்கிரி, புத்தூர் —வழக்காளி
இல. M.B. 11729 எதிராக
வெற்றிவேலு தம்புவின் கைம்பெண் பூரணம் (காலஞ்சென்ற வெற்றிவேலு தம்புவின் மரணச் சொத்துக்களின் சட்டபூர்வமான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்) கல்வியங்காடு. யாழ்ப்பாணம். — எதிராளி

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11729ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1974-ம் ஞூ ஆடி மீ 9ம் திகதி (9—7—74) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3075/-ம், 2-6-70 தொடக்கம் 2-10-70 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 423 - 20 சதம்

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு கோப்பாய் தெற்கு கோவிற்பற்று கோப்பாய் இறை "இராசுகுல சூரிய இராமலிங்கப் பதி தம்பு மண்டுவில்" 4½ இலாச்சம் நிலப்பரப்பு செய்பயிர் வான்பயிர்களும் கொண்ட ஆதனம். எல்லை கிழக்கும், வடக்கும்:- சரவணமுத்து கணபதிப்பிள்ளையின் கைம்பெண் வள்ளிப்பிள்ளையும் மறுபேர்களும் மேற்கு:- நாகநாதன் பெண் கனகம்மாவின் ஆதனம். தெற்கு: சின்னப்புவின் பெண் வள்ளியம்மையின் ஆதனம். இவ்வாதனத்தில் சொரியலாக ½ பங்கு பதிவு இல: K. 185/205

(2) மேலும், கோப்பாய் தெற்கு மண்டுவில் தெற்கு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு (8) எட்டு. கிழக்கு:- சரவணமுத்தின் பெண் மாணிக்கத்தின் ஆதனம், வடக்கு:- இராமநாதன் தில்லையம்பலத்தின் ஆதனம, மேற்கு:- சின்னத்தம்பி தங்கத்தின் ஆதனமும் மறுபேர்களும், தெற்கு:- சின்னத்தம்பி சின்னப்புவின் ஆதனம்; இவ்வாதனத்தில் சொரியலாக அரைவாசியும், கிழக்கு எல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரிமையும் உள. பதிவு இல: K 250/18

(3) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு நல்லூர் கோவிற்பற்று 'அலவன் வளவு' எனக் குறிக்கப்பட்ட துண்டுக் காணி நிலப்பரப்பு ஒன்றும், 4, 3/8 குளியும் கிழக்கு எல்லை:- செல்லையாவின் பெண் விசாலாட்சியின் ஆதனம், வடக்கு:- தம்பியன் சின்னத்துரையினதும் பெண் நல்லம்மாவினதும் ஆதனம், மேற்கு:- சின்னப்பு நாகநாதரின் ஆதனம்; தெற்கு:- ஒழுங்கை, இது அடங்கலும் பயிர்களும்; வட கிழக்கிலுள்ள கிணற்றில் பங்குகொண்ட ஆதனம். பதிவு இல: D. 234/25

அரர்லி வடக்கு, சி. செ. பாலசிங்கம்
வட்டுக்கோட்டை, கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20-5-74 57, 31-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M, B. 10734
1 காசிப்பிள்ளை மாணிக்கமும்
2 மாணிக்கம் மகள் யோகேஸ்வரியும் இருவரும் உரும்பிராய்
— வழக்காளி
எதிராக
1 கதிர்காமு அப்புத்துரையும்
2 மனைவி தங்கரத்தினமும் இருவரும் உரும்பிராய்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M B 10734-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1974 ம் ஞூ ஆனி 24-ம் (24-6-74) திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 11551-ம் 30-6-69 தொடககம் 16—2—70 வரைக்கும் ரூபாய் 3000.க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 408 - 77 இதில் ரூபாய் 200 கோட்டுச் செலவில் கழிக்கவும் இன்னும் ரூபாய் 1000 14—3—71 இல் கட்டியதையும் கழிக்கவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு "கோயிற் குண்டான் கூழாங்குளி" நில. பர, 12¼ம மற்றும கற்குண்டான் கூழாங்குளியும துலுக்கா மண்டையும் பளசந்தையும் நி. பர, 11¼-ம் மற்றும் கோயிற்குண்டான் கூழாங்குளியும் நி. பர. 11½-ம் மூன்றும் ஒன்ருக சேர்ந்து ஒரு துண்டு நி. பர. 35¼ 1962-ம் ஆவ புரட்டாதி மீ 3-ம் திகதி நில அளவையாளர் K. இராசையாவால் தயாரிக்கப்பட்ட பிளான் இல. 154-ல் துண்டு ஒன்று என்று குறிப்பிட்டதுமான காணி நில. பர. 12 எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தின் ஆதனம், மேற்கு சங்கரசிவம பெண சோதிமணியின் ஆதனம், தெற்கு மேற்சொல்லப்பட்ட பிளானில் துண்டு இரண்டும் மூன்றும் இதடங்கலும் மற்றும் அதன சொததுக்களும்.

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
வேலப்பதி
புத்தூர், 24-5-74 59

## கும்பாபிஷேகம்

இராமநாதபுரம் சமஸ்தானம், அருள்மிகு சொக்கநாத சுவாமி கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஆனந்த ஆண்டு வைகாசித் திங்கள் 10-ம்நாள் (26-5-74) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதபுரம் இராஜ பரம்பரைத் தர்ம கர்த்தா உயர்திரு. S. இராமநாத சேதுபதியவர்களும் சமூகமாயிருந்து 20-5-74தொடக்கம் 26-5-74 வரை நிகழ்ந்த கிரியைகளில் பங்குபற்றி சிறப்பித்தனர்.

## பொற்றுளப் பரிசு

பண்ணிசைச் செல்வர். திரு. B.A.S. இராஜசேகரன் அவர்களது மாணவி செல்வி கண்மணி அம்மா இராமலிங்கம் அவர்களது திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி அண்மையில் சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் கோவிலில் நடைபெற்றது. சிவநெறிக் காவலர் க. கனகராசா அவர்கள் செல்வி கண்மணி அம்மா அவர்களுக்கு அவ்வமயம் பொற்றுளம் வழங்கி கௌரவித்தார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 9833

தம்பிப்பிள்ளை கதிரவேற்பிள்ளையும் பெண் கமலாம்பிகையும் வண்ணர்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்.
தற்சமயம் 291/1 கவுலக் ரேட் கொழும்பு - 6,
எதிராக வழக்காளி
தியோகுப்பிள்ளை பத்திநாதனும் பெண் திரேசம்மாவும் வண்ணர்பண்ணை மேற்கு யாழப்பாணம், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 9833 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1974 ம் ஆவ ஆனி மாதம் 24ம் திகதி (24-6-74) திங்கட்கிழமை முற் பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல்வட்டி ரூபா 6440/- 17-3-68 தொடக்கம் 11-1-69 வரைக்கும் ரூபா 4000/- க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 367 சதம் 10. இம் முழுத் தொகையிலும் ரூபா 6000/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணை கோவிற்பற்று வண்ணர்பண்ணை தென்மேற்கில் உள்ள பறையடி சுவாடிக்கரை என்னும் 5 நிலப் பரப்பும் 8½ குளியும். உத்தரவாதம் பெற்ற A. லாசறஸ் உலாந்தாவின் 30-8-60-ம் ஆண்டில் அமைக்கப்பெற்ற 2762 இலக்க பிளானில் பகுதி B என்னும் துண்டால் அமைக்கப்பெற்றுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு S. ஞானப்பிரகாசமினதும் M. இன்னுசிமுத்துவினதும் ஆதனம். வடக்கு நீக்கிலாப்பிள்ளை ஆசீர்வாதத்தினதும் பெண் மாக்றெட்டினதும் ஆதனம், மேற்கு ரேட்டு தெற்கு K. வைத்தியினதும் மற்றவர்களினதும் ஆதனம், இது அடங்கலிலும்.

தொல்புரம் சோ நரசிங்கம் J P.
23-4-74. நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
எம் 60, மதிப்பாளரும்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. வண்ணர்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் ஐயம்பிள்ளை லோகேஸ்வரன்
2 ஷியூர் பெண் லோகேஸ்வரியம்மாள் — வழக்காளிகள்

வழ, இல. M. B. 11724 எதிராக

1. வண்ணர்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம் கந்தையா பரமேஸ்வரன்
2- ஷியூர் பெண் சரஸ்வதி - எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11724-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி என்னல் 1974 ம் ஞூ ஆடி மீ 3-ம் திகதி (3-7-74) புதன்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

திர்வைத் தொகை:- முதல்வட்டி ரூபா 6280-ம் ரூபா 4000 க்கு 31-5-1970 தொடக்கம் 16-10-1970 வரை 12 வீதமான வட்டியும அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும் இதில் ரூபா 2000 - 00 ம் 1-9-1971 லும் ரூபா 1000-00. 19-2-73 லும் கொடுபட்டது. கோட்டுச் செலவு முழுவதும் கொடுபட்டது,

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை மேற்கிறை 'தன்னடையான் வளவு' பர. நி இல 4 இதில் மேற்குப் பக்கமாக பர. நி. இல. இரண்டு (பர. நீ. இல. 2) செய் பயிர் வான் பயிர்களும்: எல்லை கிழக்கு கனகசபை சிவசக்திவேல் பெண் உலகேஸ்வரிக்குரிய ஆதனம், வடக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குரியவாதனம், மேற்கு பொன்னம்பலம் சோமசுந்தரத்திற்குரியவாதனம். தெற்கு உறுதி கொடுக்கற்காரர்கட்குரியவாதனம். இதடங்கலும். தெற்கெல்லைக் காணியின் மேற்கருகாக பொன்னப்பா ஒழுங்கைக்குப் போக்கு வரவு செய்வதற்காக விடப்பட்ட 12 அடி அகலங்கொண்ட பாதையுரித்தும். ஆனல் கிழக்கெல்லைக் காணியிலிருந்து தெற்கிலிருக்கும் பொன்னப்பா ஒழுங்கைக்குப் போவதற்கு இக காணியின் தெற்கெல்லையருகாலும் சொல்லப்பட்ட 12 அடிப் பாதைக்கூடாகவும் விடப்பட்ட எட்டு அடி அகலங்கொண்ட பாதையுரித்துப் பிற நீங்கல்.

வை. ஏரம்பமூர்த்தி.
கொமிஷனர், ஏல விற்பனையாளர்,
காரைநகர். 1974 ஞூ வைகாசி மீ 21 உ. விலைமதிப்பாளர்,
55, 31—5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தையா சின்னத்தம்பி உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்
ஈடு 12859 எதிராக —வழக்காளி
பொனனையா சிவலிங்கம், மானிப்பாய் மாக்கட் ஒழுங்கை, மானிப்பாய் – எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு. 12859ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஞூ ஆடி மீ 15ம் திகதி (15-7-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2595/-ம், 3-12-71 தொடக்கம் 18-12-72 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 316-69

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்று மானிப்பாய் இறை 'சுத்திபனை' நி. பர. 3 குளி 3 வீடும் கிணற்றில் அரைவாசிப் பங்கும் பயிர் வகைகளும் இந்த நி பர. 3 குளி 3 இன் எல்லை கிழக்கு:- இராமலிங்கம் பெண் இராசம்மாவினுதனம், வடக்கு: பொன்னுச்சாமி சுப்பிரமணியத்தின் உரிமைகாரரின் ஆதனம், மேற்கு:- கந்தையா சின்னத்தம்பியும் பெண் அன்னமுத்துவின் ஆதனம், தெற்கு:- ஒழுங்கை, இதன் அடங்கலும்

சி, செ பாலசிங்கம்
அராலி வடக்கு கொமிஷனர், விலைமதிப்பாளர்
வட்டுக்கோட்டை, 7-5-74. 51 31 - 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல. M. B 12287

அன்றுதியோபிலஸ் குருநாதர் பிறிற்றோ (Andrew Theophilus Gurunaiher Britto) 46, புறோடி ஒழுங்கை, யாழ்ப்பாணம் வழக்காளி

எதிராக

1 தம்பு பொன்னையாவும் பெண்
2, அன்னலெட்சுமியும் கதிரவேலு ஒழுங்கை அரியாலை, யாழ்ப்பாணம்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 12287ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1974-ம்ஸ்ரீ ஆனிமாதம் 18-ம் திகதி (18-6-74) செவ்வாய்க் கிழமை முக்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 9500/- இதில் குறைக்க வேண்டியதொகை ரூபா 1000/- 5-2-71 தொடக்கம் 29-9-71 வரைக்கும் ரூபா 8000/-க்கு 5% வீத வட்டியும் அதற்குப்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை- 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 511-47 சதம் தீர்வைக்குப்பின் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 2000/- செலவு ரூபா 150/- குறைக்கவேண்டியது

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குழி கோவிற்பற்று சிவியாதெரு இறை "சாயக்காரன் புலம்" (Chayakkaranpulam இதன் விஸ்தீரணம் நில்பரப்பு 5 உத்தரவுபெற்ற அளவையாளர் வி. சண்முகலிங்கம் அவர்களால் 3-3-41ம் தயாரிக்கப்பட்ட படம் இலக்கம் 3617 ல் A காட்டப்பட்டுள்ளது, வீடும் குசினியும் கிழக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரிமையும். எல்லை கிழக்கு செல்லையா கைம்பெண் சரஸ்வதியின் ஆதனம், வடக்கு அப்பாவி சினனத்தம்பியின் ஆதனம், மேற்கு திருஞானசம்பந்தர் பெண் இராஜலட்சுமியின் ஆதனம், தெற்கு கதிரவேலு ஒழுங்கை.

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
22, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
33--73 9 8-

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 12656

இளையதம்பி நவராஜா மனைவி சுகிதரத்தினம் மானிப்பாய்
—வழக்காளி

எதிராக

ஆறுமுகம் தம்பிமுத்து பெண் நாகம்மா இருவரும் மூர்த்தனயர் கோவில் வடகிழக்கு ஒழுங்கை ஆனைக்கோட்டை
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12656ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம் ஆடி மீ 1-ம் திகதி (1-7-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4,496/-ம் 21-7-71 தொடக்கம் 6-12-71 வரைக்கும் ரூபா 3,000/-க்கு 9 வீத வட்டியும் அதன் பின முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 461-90. இதில் கழிவு ரூபா 400/— 6-12-71 ரூபா 500/— 11-4-72 ரூபா 2,500/— 27-8-72.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை நில, பர 3 குளி 131 பயிர்களும் கிணறும் கல்வீடும் கொண்ட ஆதனம். கிழக்கு எல்லை ஒழுங்கை. வடக்கு தற்போது கௌரீஸ்வரி இராசசிங்கத்தின் மகளுக்கு உரிய ஆதனம் மேற்கு ஆறுமுகம் இராசசிங்கம் தெற்கு ஒழுங்கையும் சிறிபால சுப்பிரமணிய ஆலயம். இது அடங்கலும்:

சி. செ. பாலசிங்கம்
[illegible]
[illegible]
20-5-74. 58 31-5-74.

---

## AUCTION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல: 11918

பொ. கணபதிப்பிள்ளை மகாதேவன் கறணவாய் வடக்கு
எதிராக —வழக்காளி
V. கணபதிப்பிள்ளை வல்லிபுரம், கறணவாய் தெற்கு —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1974ம் ஆண்டு ஆடி மாதம் 1-ம் திகதி (1-7-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1ம் ஆதனம் 10 மணிக்கும், 2ம் ஆதனம் 10-30 மணிக்கும், 3ம் ஆதனம் 11 மணிக்கும் விற்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1ம் ஆதனத்தின் பெறுமதி | ரூபா | 2875-00 | 7705–50 |
| 2ம் ,, ,, | ரூபா | 1266-50 | |
| 3ம் ,, ,, | ரூபா | 3564-00 | |

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று

(1) கறணவாய் சோளங்கக்குறிச்சி இறை புட்டணிவயல்' நெ. பர. 8 எல்லை கிழக்கு:- கந்தையா கைம்பெண் வள்ளியம்மைக் குடையவாதனம்; வடக்கு:- கந்தையா சிவஞானசுந்தரத்துக்கும் கணபதிப்பிள்ளை பெண மரகதவள்ளிக்குமுடையவாதனம், மேற்கு: கணபதிப்பிள்ளை நடராசாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு:- எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் நெ. பர 5¾

(2) கறணவாய் சோளங்கக்குறிச்சி இறை 'பணிக்கத்தனை' நெ. பர. 7 குளி 10¾ எல்லை கிழக்கு:- குட்டித்தம்பி நல்லையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு:- கனகசபை பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம, மேற்கு:- வல்லிபுரம் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு:- பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை பெண் மரகதவள்ளிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற சொரியலாய் 1/3 பங்கும்.

(3) கறணவாய் இளாகமக்குறிச்சி இறை 'முப்பிற்றியன் சீமா' நி. பர. 1 ¾ இது V சீவரத்தினம சேவயரால் 1959ம் ஆண்டு ஆடி மாதம் 14ம திகதி 1961ம் நம்பர் படத்தின்படி அளந்து காணப்பட்டபடி நி. பர. 14 குளி 2, 24/32 இப் படத்தில் 1ம் நம்பர் துண்டுக்கு நி. பர. 3 குளி 9, 22/32 எல்லை கிழக்கு:- வல்லிபுரம் முருகேசுவுக்குடையவாதனம், வடக்கு:- எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு:- ஒழுங்கை, தெற்கு:- குட்டியர் சின்னத்துரைக்குடைய வாதனம், இவவெல்லைக்குள்ளிருக்கும் நிலம், பனைகள், வடலிகள் அடங்கலும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | தீர்வைத்தொகை: ரூபா 3854/- அதில் கொடுபட்டதொகை ரூபா 1000/- குறைத்து | ரூபா | 2854 | 00 |
| (2) | 2-8-72 தொடக்கம் 29-5-72 வரை ரூபா 2000/-க்கு 10%வட்டி | ரூபா | 166 | 00 |
| (3) | 30-5-73 தொடக்கம் 3-4-74 வரை ரூபா 3020/-க்கு 5% வட்டி | ரூபா | 125 | 83 |
| (4) | கோட்டுச் செலவு | ரூபா | 364 | 03 |
| | கொடுக்கவேண்டிய தொகை | ரூபா | 3509 | 86 |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி, 27-5-74 54, 31—5

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

உரும்பிராய் 1. தம்பு சிவசுப்பிரமணியம் 2 பெண் தங்கரெத்தினம்
இல M B 10198 எதிராக — வழக்காளிகள்
நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம் கந்தர் துரைசாமி — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10198-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம் ஸ்ரீ ஆனி மீ 28-ந் திகதி (28-6-74) வெள்ளிக்கிழமை மூற் பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 1613/- இன்னும் ரூபா 1000/-த்துக்கு 6-8-68 தொடக்கம் 5-9-69 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன் மேல் முளுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 259-01 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெருயிறை "வீரன் புலம்" பர, நில. இவா 4 இதில் வடக்காலை பிரிவிடப்பட்ட பர நில இளா 2ம் இக்காணியிலிருந்து கிளக்கிலிருக்கும் பிரதான ஒழுங்கைக்குச் செல்வதற்குத் தெற்கெல்லைக் காணியின் கிளக்கெல்லையோரமாக ஒதுக்கப்பட்டுள்ள பத்தடியகலமுள்ள ஒளுங்கையில் அரைப் பங்குருத்தும் இதற்கெல்லை கிழக்கு வேலன் நாகமணிக்குரியவாதனம், வடக்கு சின்னத்தம்பிக்கும் பெண் தையலம்மாவுக்குரியவாதனம். மேற்கு கதிரவேலு சின்னத்தம்பிக்குரியவாதனம். தெற்கு ஆறுமுகம் அப்புக்குட்டிககும் பெண் அரியமலருக்குமுரிய வாதனம்.
பதிவிலக்கம் D 300/266.

செ. விசாகரெத்தினம்.
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
133, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், 28-5-74. 53, 31-

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல. M B 12414

கட்டுடை (1) மாணிக்கம் நடராசாவும் பெண்
மானிப்பாய் (2) வீரதசிரோன்மணியும் —வழக்காளிகள்

எதிராக

கொக்குவில் கிழக்கு பொன்னம்பலம் சின்னத்தம்பி கைம்பெண் சரஸ்வதி (காலஞ்சென்ற, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம். பொன்னம்பலம் சின்னத்தம்பியின் ஆதனத்துக்கு தானகவும், தத்துவகாரியாகவும்.)
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12414ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ஆண்டு ஆடி மீ 10-ம் திகதி (10—7—74) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 8980/-ம், 31-3-71 தொடக்கம் 13-7-72 வரைக்கும் ரூபா 5000/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 488 - 60 சதமும் செலவில் ரூபா 200/- கட்டப்பட்டுள்ளது.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதியும் டிஸ்திறிக்கும், நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "தொட்டான் தோட்டம்" (Tottan Thoddam) நி. பர. 4¾ம் கல் வீடும் பயிர்களும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் மேற்கெல்லைக் காணிக்குத் தெற்கிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும். வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் இந்த நி. பர. 4¾க்கு எல்லை கிழக்கும் வடக்கும்:- ஒழுங்கை, மேற்கு:- கதிரிப்பிள்ளை விசுவரத்தினத்தின் ஆதனம்; தெற்கு:- கனகசபை கனகரத்தினத்தின் ஆதனம். இதிற் சொரியலாய் அரைப் (½) பங்கு, மற்ற அரைப்பங்கு 5709 இலக்க பத்திரப்படி விடுவிககப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் D. 271/121 ல் பதியப்பட்டது,

செ. பாண்டித்துரை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.

மல்லாகம்.
30-5-74
62 31-5

---

## Commission Sale

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில், வழ. இல. 12224

(1) ஆள்வாப்பிள்ளை இராசரெட்டினம் பெண் மீனம்மா
(2) ஆ. இராசரெட்டினம் மகள் சரோஜினிதேவி
(3) ஆள்வாப்பிள்ளை இராசரெட்டினம்
புலோலி மேற்கு, —வழக்காளிகள்

எதிராக

(1) பொன்னையா இராசையா புலோலி தெற்கு
(2) நல்லையா நித்தியானந்தன் துன்னலை வடக்கு
—எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும ஆதனத்தை 1974 ஆம் ஸ்ரீ யூன் மாதம் 15-ம் திகதி (15-6-74) சனிக்கிழமை முற்பகல் 10-30மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் மன்னுர் டிஸ்திறிக் மாந்தைப் பகுதி மாந்தை தெற்குக் கோவிற்பற்று இலுப்பைக் குளமும் ஊத்தவாயன் குளமும் இறை, 'சொர்ணவயல் கிராமம் அல்லது சோமவயல் கிராமம்' இதன் விசாலம் ஏக்கர் 224; பேட்சு 12, இதில் நடுவாக வடக்குத் தெற்காக கிராமச் சங்கத்திற்கு விடப்பட்ட தெரு 48-ம் இலக்கம் பூண்ட நிலத்துக்கு மேற்கு பக்கமாகவுள்ள ஏக்கர் 112, றூட் 3, பேட்சு 28 இதற்கு 1960ம் ஆண்டு ஆனி மாதம் 11, 12-ம் திகதிகளில் கொழும்பு உலாந்த மேஸ்தர் V. சிவசுந்தரத்தால் அளக்கப்பட்டு 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி 470ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி ஏக்கர் 112, றூட் 3, பேட்சு 15·98 இதில் முதலாம் துண்டுக்குரிய ஏககர் 24, றூட் 1, பேட்சு 39. இதுவும் குறித்த படத்தில் 16ம் நொம்பர் துணடுக்கு றூட் 1, பேட்சு 28·6 இதுவும் கூடிய (ஏ. 24, றூட், 3, பேட்சு 27·6) ஏக்கர் இருபத்திநாலு, றூட் மூன்று, பேட்சு இருபத்தேழுடன் பத்திலாறு. எல்லை வடகிழக்கு: குறித்த படத்தில் 2ம் நம்பர் துண்டு, தென் கிழக்கு றோட்டுக்காக விடப்பட்ட நிலம், தென் மேற்கு: றெயில் பாதையும், அதற்கருகாக விடப்பட்ட நிலமும், முடிக்குரிய நிலமும்; வடமேற்கு: வழி நிலமும், முடிக்குரிய நிலமும், அந்தோனி முத்துவுக்கும் மறுபேருக்குரிய வயல் நிலமும், இவ்வெல்லைக் கூடாகப்போகும பழைய றிசவேசன் நிலம் நீங்கலாக மிகுதி முழுவதும். மதிப்பிட்ட விலை ரூபா 30,000/-)

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத்தொகை: | | ரூபா | 12220 00 |
| வட்டி ரூபா 6,500/-க்கு 12 வீதப்படி 19-4-73 தொடக்கம் 16-10-73 வரை | | ,, | 390 00 |
| வட்டி ரூபா 12,610/-க்கு 5 வீதப்படி 16-10-73 தொடக்கம் 16-2-74 வரை | | ,, | 210 00 |
| வட்டி ரூபா 12,610/-க்கு 5 வீதப்படி 16-2-74 தொடக்கம் 15-6-74 வரை | | ,, | 210 00 |
| | மொத்தத் தொகை | ரூபா | 13030 00 |

'சிவலிங்க நிலையம்"
வி. எம், றோட்,
பருத்தித்துறை, 25-5-74.
56- 74

க. நல்லலிங்கம்
கோட் கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல்
வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞு வைகாசி மீ கஎ-உ வெள்ளிக்கிழமை [1974]

## திருவிழா நெறிமுறை

வேதசிவாகம விதிப்படி அமைக்கப்பெற்ற சைவாலயங்களிலே திருவிழா நிகழ்ச்சிகள் வைதீக முறை வழி நடைபெறுகின்ற பாரம்பரிய நெறி இந்நாட்களில் அருகி வருவதைத் தடுத்து வைப்பது மெய்யடியார்களின் கடமையாகும்.

மக்கள் இவ்விழாக் காலங்களிலே ஏராளமாகக் கூடுகின்றனர். அக்காலங்களில் அவர்கள் திரிகரண சுத்தியுடன் தெய்வ வழிபாடு செய்வதற்குரிய ஒழுங்குகளை அமைப்பது ஆலய நிருவாகிகளுக்கும் ஆதீன கர்த்தாக்களுக்கும் உபயகாரருக்கும் உள்ள பொறுப்பாகும்.

பழம்பெருமையும் திருமுறைப்பாடல் விசேடமும் பொருந்திய கோயில்கள் முன்மாதிரியாக நிகழ்வதற்கும் ஏனைய ஆலயங்கள் அவ்வழி ஒழுகுவதற்கும் இணைப்புச் சங்கங்கள் இயங்குதல் அவசியம். வைதிக விதிமுறை தவறாத சைவ சபைகள் இவ்வொழுங்குகளை அமைத்தல் பொருத்தமாகும்.

திருக்கேதீசுவரம், மாவைக் கந்தன் கோவில், நகுலேசுவரம், வண்ணை வைத்தீசுவரன் கோவில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முதலியனவற்றிலே திருவிழா நிகழ்ச்சிகள் செவ்வனே அமைவன. அவ்வாறே ஏனைய ஆலயங்களிலும் இவ்வழி விழாக்கள் நடைபெறுவதற்கு முதற்கண் உபயகாரரே உதவியளித்தல் வேண்டும்.

களியாட்ட வைபவமாகத் திருவிழாவை மாற்றியமைத்தல் மாபாவம். வேதபாராயணம், திருமுறை ஓதல், சைவசித்தாந்த சற்சொற்பெருக்குகள், திருமுறைப் பண்ணிசை என்ற வகைகளில் நிகழ்ச்சிகளை அமைத்து உரிய காலத்தில் விழா முடிவுற நேர வரையறை செய்வது ஆதீன கர்த்தாவின் முதற் கடமை. ஆலய நிர்வாகிகளும், உபயகாரரும், அடியார்களும் பூரண ஒத்துழைப்பு நல்குவது வேண்டப்பெறும். ஒலிபெருக்கி என்ற கருவி திருவிழாச் சேம்மையைச் சீர்கெடச் செய்வதை யாவருமறிவர். பேரொலி கொட்டியும், திரைப்படப் பாடல்களையும், வேறு வேடிக்கைச் சிந்துகளையும் இடைவிடாது ஒலிக்கச் செய்தும், விழாக்களை வீண்விகட வேடிக்கை நிகழ்ச்சிகளாக்குவது மக்களுக்கு இயற்றும் துரோகச் செயலாகும்.

நிகழவிருக்கும் சைவ மாநாட்டில் இது பற்றிப் பேரறிஞர்கள் கலந்துரையாடி ஒரு நடைமுறை விதி நெறியை அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

## பிறமத பாட போதனை

வித்தியாசாலைகளில் மாணவர்கள் சமயக் கல்வி கற்கும்பொழுது அவர்களுடைய சமய நூல்களில் பிறமதங்களைப்பற்றிய கருத்துக்களும் ஊட்டப்பட வேண்டும் எனத் அணை அமைச்சர் ஒருவர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். இத்தீர்மானத்தை எங்கள் சைவ பரிபாலன சபை. கொழும்பு இந்துமா மன்றம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற பிரபல சைவ சமயச் சபைகள் கண்டித்திருக்கின்றன. இந்து மத சமய பாடப்புத்தகங்களில் பிறமதத் திணிப்பு நடைபெற்றுங் காலத்தில் அதற்கு எதிராக நேரடி நடவடிக்கையை நடத்த கொழும்பு இந்துமாமன்றம் தீர்மானஞ் செய்துள்ளதாக அறிகின்றோம். 19-5-74ல் அன்று சைவ பரிபாலன சபையினது நிருவாகசபைக் கூட்டத்தில் இவ்விஷயம் யோசிக்கப்பட்டபொழுது அரசாங்கத்தினுடைய இச் செயலைச் சபை கண்டிக்கும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன,

ஒரு பிள்ளை தனது குழந்தை உள்ளத்தில் [illegible] தாயனைய மதத்தைக் கற்கும்பொழுது அச்சமய [illegible] மைகளை அச்சமய அடிப்படையில் கற்பதே சிறந்தது. முதல் தனது சமய உண்மைகளை அப்பிள்ளை உணர்தல் வேண்டும். அங்ஙனம் கற்கும்பொழுது பிற மத வுண்மைகளைக் கற்கத் தொடங்கினல் அப்பிள்ளையினுடைய சமய யறிவிற்கு கலக்கமேற்படும். சமய சாதனைகளையும் அப்பிள்ளையின் சமய விதிகளின்படி அநுட்டிக்க முடியாது, சமூக ஒற்றுமையையும் சமயத்துறையில் பரந்த அறிவையும புகட்ட விரும்பினல் கல்வியதிகாரிகள் பிற சமய உண்மைகளை சமூகக் கல்வி. சரித்திரம், இலக்கியம் போன்ற பாடப் புத்தகங்களில் சேர்க்கலாம்.

ஒரு பிள்ளை சமயம் கற்பது தனது சமயங் கூறும கடவுளையும் அவரிலக்கணங்களையும் அவரையடையும் மார்க்கத்தையும் அச்சமய நெறிகள் மூலம் உணர்தற்பொருட்டேயாம். குழந்தைகள் உள்ளத்தில் சமயத்துறையில் பிறமதக் கருத்துக்களை இளமையிற் புகட்டுதல் அவர்கள் உள்ளத்திற் பெருங் கலக்கத்தையே உண்டுபண்ணும்.

உ

### சைவ பரிபாலன சபை யாழ்ப்பாணம்

### சித்தாந்த பிரவேச - பாலபண்டித பண்டித பரீட்சைகள் 1974

விண்ணப்பிக்கும் இறுதி நாள்: 31—8—74
பரீட்சை நடைபெறும காலம்: 27, 29, 30-12-74

பாடவிதானம் — விண்ணப்பப் பத்திரம் என்பன 10-6-74க்கு மேல் நேரிலோ அல்லது கடித மூலமோ எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

சைவ பரிபாலன சபை
பரீட்சைப் பகுதி
450, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## நம்பியாண்டார்நம்பி குருபூசையும் சேக்கிழார் குருபூசையும்

சைவப்ரிபாலன சபையாதரவில், 25-5-74லும், 26-5-74லும் மேற்படி குருபூசைகள் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன.

நம்பியாண்டார் நம்பி குருபூசையிலன்று திருமுறை கண்ட புராண படனமும், சேக்கிழார் குருபூசையிலன்று சேக்கிழார் புராண படமும் நிகழ்ந்தன.

சைவப்பெரியார் சி. தம்பியையா, திரு. அ. நாகலிங்கம், வித்துவான் க. கணபதிப்பிள்ளை, திரு. மு. மயில்வாகனமும் பிறரும் புராண படனத்தைச் சிறபபாக நடத்தினர்.

## விசாகப் பொங்கல்

நிகழும் ஆனந்த வருஷம் வைகாசி மீ ௨0-ம் திகதி (3-6-74) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி முதல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 5 மணிக்கு பொங்கலும் வழமைபோல, யாழ்ப்பாணம கோட்டடி ஸ்ரீ பாலஞான வைரவர் கோவிலில் நடைபெறும்.

## பண்ணிசை மன்ற உறுப்பினர் விபரம்

வட இலங்கைச் சங்கீத சபையின் சார்பில் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பண்ணிசை மன்ற நிர்வாகிகள் விவரம் பின்வருமாறு:

போஷகர்கள்:- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை, திரு. மு. குமாரசிங்கம்

தலைவர்: திரு. தி. மாணிக்கவாசகர் (கல்வி அதிபதி, வடமாகிலம்.)

உப தலைவர்கள்: வைத்திய கலாநிதி க. சிவஞானரத்தினம், இசைப் புலவர் என். சண்முகரத்தினம்,

காரியதரிசி: தேவார சங்கீதபூஷணம் வே. கனகசுந்தரம், உப காரியதரிசி: அதிபர் திரு. எஸ். தர்மலிங்கம்,

தனதிகாரி:- ஆசிரியர் திரு அ. பஞ்சாட்சரம; உப தனதிகாரி: சங்கீதபூஷணம் பி. சந்திரசேகரம்.

நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## திருஞானசம்பந்தர் குருபூசை

சைவ சமய அபிவிருத்திக் கழக ஆதரவில் சாந்தையர் மடப் பிள்ளையார் கோவிலிலும், பெரியபுலம் மெ. மி. பாடசாலையிலும் திருஞானசம்பந்தர் குருபூசை எதிர்வரும் 6-6-74 வியாழக்கிழமையன்று நிகழவிருக்கின்றது. விசேட உபந்நியாசம், திருமுறையோதல் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

## பத்தாண்டு நிறைவு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

வுற்று 11-ஆவது ஆண்டு ஆரம்பமாகவுள்ளது. எதிர்காலத்தில் இன்னும் டல முக்கியமான சமயப் பணிகளைச் செய்வதற்கு சைவ இளைஞர்கள் எல்லோரையும் கரம் கொடுத்து உதவுமாறு இம் மன்றத்தின் பேரால் வேண்டுகோள் விடுக்கின்றேம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின்கொள்கை வழி நின்று பணி புரிவது எமது மன்றம். அன்னாரின் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடவேண்டும் என்று முதன் முதல் முயற்சி செய்ததும் நமது மன்றமே,

ஆகவே எதிர் காலத்தில் சிவநெறியைப் பரப்ப இம் மன்றம்பணிபுரிய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி எமது அறிக்கையைப் பூர்த்திசெய்கிறேம்.

## திருவள்ளுவர் விழா

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் 4-6-74 செவ்வாய்க்கிழமை 4-50 மணி முதல் சபை மண்டபத்தில் திருவள்ளுவர் விழா நடைபெறும். பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் டாக்டர் இந்திரா சிவயோகம் சிறீஸ்கந்தராசா, வண. ஜோ. மை. சவரிமுத்து, டி. டி. நாணயக்காரா, திருமதி. எச். கமால்தீன், ந. சண்முகரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திருமுறை விழா...

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

திருமதி கங்கேசுவரி கந்தையா தலைமையில் ஆரம்பமாகும். செல்வி ந. மகேசுவரி, செல்வி பாமினி சிவப்பிரகாசம், இ. சுரேஸ் சந்திரா, ம. பாலகிருஷ்ணன். செல்விகள் மு. இந்திரா, ரததினேஸ்வர ரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

மாலை நிகழ்ச்சி கலாநிதி ஆ. கந்தையா தலைமையில் நடைபெறும். வித்துவான் சி. ஆறுமுகம், இ. இரத்தினம் நா. முத்தையா, ச. விநாயகமூர்த்தி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

## வாழும் முறை

மறந்தும்பிறன்கேடு சூழற்கசூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன கேடு.

ஒருவன் மறந்தும் பிறருக்குத் தீங்கு செய்தல் கூடாது. அவ்வாறு தீங்கிழைப்பின் இறுதியில் அவனுக்கேதீங்குவிளையும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 31—5—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மு. மயில்வாகனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org